**International Seminar on Financial Markets: Issues and Challenges (FIM IC – 2016) held on 9 -10 January, 2016 at Bharathidasan University, Trichy**

**Organiser: Dr. M. SELVAM**

**Dinamalar, Tiruchirappalli Edition, Dated:12.01.2016, Page No:14**



# மதிப்பீட்டு கல்விக்கு முக்கியத்துவம்

## பதிவாளர் வலியுறுத்தல்

திருச்சி, ஜன.12-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் மற்றும் நிதிக்கல்வி துறையின் 'ஸ்மார்ட்' இதழ் சார்பில் விருது வழங்கும் விழா மற்றும் சர்வதேச கருத்தரங்கு நடந்தது.

'நிதிச்சந்தைகள் முன்னேற்றங்களும், சவால்களும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கை பல்கலை. பதிவாளர் திருச்செல்வம் தொடங்கி வைத்து பேசுகையில், "அரசு பல்வேறு முயற்சிகள் எடுத்தாலும் நாட்டின் மக்கள் தொகையில் 1சத சதவீதத்தினர் மட்டுமே பங்கு சந்தையில் முதலீடு செய்கின்றனர். இதற்கு மக்களுக்கு பங்கு சந்தை மீது உள்ள அவநம்பிக்கையே காரணம். இத்தகைய கருத்தரங்குகள் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவநம்பிக்கையை போக்க உதவும். மாணவர்களிடம் கல்வி அறிவை பெருக்குவதோடு மட்டுமல்லாமல் மதிப்பீட்டு கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்'' என்றார்.

மும்பை இந்திய தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் நாராயணன், மலேசியா பல்கலை. பேராசிரியர் கீதா, திருச்சி காவேரி மகளிர் கல்லூரி முதல்வர் சுஜாதா ஆகியோருக்கு ஸ்மார்ட் இதழ் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. சாய்ராம் மேலாண்மை படிப்புகள் மைய பேராசிரியர் மாறனுக்கு இளைய மேலாண்மை அறிவாளர் விருது வழங்கப்பட்டது. மும்பை எஸ்.பி.ஜெயின் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் துளசி ஜெயக்குமாருக்கு சிறந்த கட்டுரையாளர் விருது வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் சங்கரன் வெங்கடேஸ்வர், நாராயணன், சத்தியா சட்டோபாத்யாயா ஆகியோர் உரையாற்றினர். 2ம் நாள் நிகழ்வில் அமெரிக்கா சாம்ஹோஸ்டன் பல்கலை. பேராசிரியர் பாலசுந்தரம் மணியன், கீதா, லயோலா வணிக மேலாண்மை நிறுவன பேராசிரியர் விக்டர் லூயிஸ் அந்துவான் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவு விழாவில் பாரதிதாசன் பல்கலை. மனிதவள மேம்பாட்டு மைய இயக்குநர் கற்பக குமரவேல் பேசினார். உதவி பேராசிரியர்கள் வனிதா, காயத்ரி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

ஏற்பாடுகளை வணிகவியல் மற்றும் நிதிக்கல்வித் துறை தலைவர் செல்வம், ஒருங்கிணைப்பாளர் பாபு ஆகியோர் செய்திருந்தனர்.

திருச்சி பாரதிதாசன் பல்கலை.யில் வணிகவியல் மற்றும் நிதிக்கல்வி துறையின் 'ஸ்மார்ட்' இதழ் சார்பில் நடந்த விழாவில், விருதுகள் பெற்ற திருச்சி காவேரி மகளிர் கல்லூரி முதல்வர் சுஜாதா, மலேசிய பல்கலை. பேராசிரியர் கீதா, மும்பை இந்திய தொழில்நுட்ப நிறுவன பேராசிரியர் நாராயணன், சாய்ராம் மேலாண்மை மைய பேராசிரியர் மாறன், மும்பை எஸ்.பி. ஜெயின் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் துளசி ஜெயக்குமார் ஆகியோருடன் பல்கலை. பதிவாளர் திருச்செல்வம் மற்றும் பலர்.

**Dailythanthi, Tiruchirappalli Edition, Dated: 20.01.2016, Page No.: 21**



# பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கருத்தரங்கு

திருச்சி, ஜன.20-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வணிகவியல், நிதிகல்வித்துறை சார்பில் 2 நாள் சர்வதேச கருத்தரங்கு மற்றும் துறை ஸ்மார்ட் இதழின் விருது வழங்கும் விழா பல்கலைக்கழக கூட்டரங்கில் நடைபெற்றது. கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சி மற்றும் விருது வழங்கும் விழாவில் துறைத்தலைவரும், கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளருமான செல்வம் வரவேற்று பேசினார். பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் திருச்செல்வம் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி, மும்பை இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் முனைவர் நாராயணன், மலேசிய யுனிவர்சிட்டி டெக்னாலஜி பேராசிரியர் முனைவர் கீதா சுப்பிரமணியம், திருச்சி காவேரி கல்லூரி முதல்வர் முனைவர் சுஜாதா, சாய்ராம் மேலாண்மை படிப்புகள் மையத்தின் பேராசிரியர் மற்றும் இயக்குநர் முனைவர் மாறன், மும்பை எஸ்.பி.ஜெயின் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசியர் முனைவர் துளசி ஜெயக்குமார் ஆகியோருக்கு விருதுகளை வழங்கி பேசினார். இரண்டாம் நாள் நடைபெற்ற கருத்தரங்கு நிறைவு நாள் நிகழ்ச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழக கல்வியியல் தொழில்நுட்பத்துறையின் பேராசிரியர் முனைவர் கற்பக குமாரவேல் நிறைவுரையாற்றினார். உதவிப் பேராசிரியர்கள் வனிதா, காயத்திரி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**Cauvary Times, Tiruchirappalli, Dated:15-21.01.2016, Page No:04**



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக்கல்வித்துறை நடத்திய SMART இதழ் சார்பில் விருது வழங்கும் விழா சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.செல்வம் வரவேற்றார். பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் திருச்செல்வம் தலைமை தாங்கி விருதுகளை வழங்கி பாராட்டி பேசினார். முனைவர் கே.நாராயணன் (மும்பை), முனைவர் கீதா சுப்பிரமணியம் (மலேசியா), முனைவர் வி.சுஜாதா (திருச்சி காவேரி கல்லூரி முதல்வர்), முனைவர் கே.மாறன் (சாய்ராம் மேலாண்மை படிப்பு மையம்), முனைவர் துளசி ஜெயக்குமார் (மும்பை) ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் முனைவர் சங்கரன் வெங்கடேஸ்வர், முனைவர் பாலசுந்தரம் மணியம், முனைவர் எஸ்.சேகர், முனைவர் சத்திய சட்டோபாத்தியாய (அமெரிக்கா), லயோலா பேராசிரியர் முனைவர் விக்டர் லூயிஸ் அந்துவான், முனைவர் ஆர்.கற்பககுமாரவேல், முனைவர் பாபு, முனைவர் வனிதா, முனைவர் காயத்ரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**The Hindu, Tiruchirappalli Edition, Dated:31.01.2016, Page No:05**



# Director of Sairam Institute honoured

K. Maran, professor and director of Sri Sairam Institute of Management Studies, was presented the 'Young Management Scientist Award – 2015' by SMART Journal of Business Management Studies. C. Thiruselvam, registrar, Bharathidasan University, Trichy, presented the award. The function was held during the UGC-sponsored international conference on 'Financial Markets: Issues and Challenges', organised by the department of commerce and financial studies, Bharathidasan University.

Maran has contributed to management and social science research and has published around 200 research articles, said a release. He has conducted several surveys including awareness of junk food, inflation and newspaper reading habits among students.

**Dinamalar, Tiruchirappalli Edition, Dated:31.06.2016, Page No:12**



# இணையத்தில் எழுதும் வரலாறு பலன்தராது எழுத்தாளர் பாலகுமாரன் கருத்து

திருச்சி, மே 31-

முகநூல், இணையத்தில் மட்டும் வெளியிடப்படும் வரலாறு பலன் தராது என்று எழுத்தாளர் பாலகுமாரன் பேசினார்.

கங்கைகொண்ட சோழபுரம் மேம்பாட்டு குழுமம் சார்பில் ராசேந்திர சோழன் வரலாறு இணையம் முனைவோர் சந்திப்பு திருச்சியில் நடந்தது.

அரியலூர் அரசு கலைக் கல்லூரி முன்னாள் முதல்வர் தியாகராஜன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட எழுத்தாளர் பாலகுமாரன் பேசுகையில், 'வரலாறு அனைத்தும் புத்தகமாக வெளிவரவேண்டும். முகநூலிலும், இணையத்திலும் மட்டுமே வரலாற்று பதிவுகளை வெளியிடுவது பலன் தராது. 'குழு முயற்சி தான் வெற்றியை தரும். இரண்டாம் ராசேந்திர சோழன் நாவலை 4 பாகமாக வெளி கொண்டு வரும் முயற்சியில் இறங்கியிருக்கிறேன்.

என் கடைசி மூச்சு இருக்கும் வரை சோழ தேச மேன்மைகளை மக்களிடம் எடுத்து சென்று சேர்ப்பதே என் கடமை. இவ்வாறு பாலகுமாரன் பேசினார்.

கங்கைகொண்ட சோழபுரம் மேம்பாட்டு குழும தலைவர் கோமகன் கருத்துரையாற்றினார். ஆத்தூர் அரசு கலைக்கல்லூரி வரலாற்றுத்துறை உதவி பேராசிரியர் சிவராமகிருஷ்ணன், தொல்லியல்துறை கல்வெட்டு ஆய்வாளர் பத்மாவதி, சென்னை வரலாற்று புதையல் இணையதள சசிதரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பாரதிதாசன் பல்கலைக் கழக வணிகவியல் மற்றும் நிதித்துறை தலைவர் செல்வம் வரவேற்றார். நிறைவாக செல்வி நன்றிகூறினார்.